பாடம்
09

## நாம் ஒன்றுபடுவோம்

திருப்பலி ஆரம்பிக்கும் போது அருட்தந்தை அவர்கள் இறை மக்களை நோக்கி இவ்வாறு கூறுவார்.

"சகோதரர்களே, திருப்பலி ஒப்புக் கொடுக்க நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை நினைத்து அவற்றிற்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்போம்."



அப்போது ஒவ்வொருவரும் மௌனமாகத் தாம் செய்த குற்றங்களையும் பாவங்களையும் நினைவுபடுத்திக் கொள்வர். பின்னர் அவற்றிற்காக மனம் வருந்தி மன்னிப்புப் பெற்று நல்ல தொரு வாழ்வு வாழ வரம் வேண்டிச் செபிப்பர். பின்னர் எல்லோரும் ஒன்றித்துக் கீழ் வரும் செபத்தைச் சொல்லுவர்.

எல்லாம் வல்ல இறைவனிடமும் சகோதரர்களே உங்களிடமும் நான் பாவி என்று ஏற்றுக் கொள்ளுகிறேன். ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன். என்பாவமே! என்பாவமே! என் பெரும் பாவமே! ஆகையால் எப்போதும் கன்னியான பரிசுத்த மரியாயையும், வானதூதர் புனிதர் அனைவரையும், சகோதரர்களே உங்களையும் நம் தேவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக் கொள்ள மன்றாடுகிறேன்.

இந்தச் செபம் முடிவில் அருட் தந்தை அவர்கள் இவ்வாறு கூறுவார். எல்லாம் வல்ல இறைவன் நம் மீது இரக்கம் வைத்து நம் பாவங்களை மன்னித்து நம்மை நித்திய வாழ்விற்கு அழைத்துச் செல்வாராக

அப்போது எல்லோரும் “ஆமென்“ என்று பதிலளிப்பர்

இது திருப்பலியின் மன்னிப்பு வழிபாட்டுப் பகுதியாகும்.

எனவே நமக்கு மன்னிப்பு வழிபாட்டின் மூலம் ஆன்ம பெலன் கிடைக்கிறது. நல்ல பிள்ளைகளாக வாழுவதற்கு வல்லமை கிடைக்கிறது.

ஆனபடியால் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தவறாமல் திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**ஒப்படை :**

1. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் திருப்பலியில் பங்கு கொள்ளுங்கள்
2. நீங்கள் ஏதாவது தவறு செய்தால் மன்னிப்புப் பெற தாமதியாதேயுங்கள்.
3. நல்ல பிள்ளையாக வாழ வரம் வேண்டிச் செபியுங்கள்.